# யாழ் சாரணன் மடல்

YARL SARANAN යාපනය බාලදක්ෂ

தை – மார்கழி 2024 மடல் 02

இலங்கை சாரணர் சங்கம் யாழ் மாவட்ட கிளை ලංකා බාලදක්ෂ සංගමය යාපනය දිස්ත්‍රික් ශාඛාව Sri Lanka Scout Association Jaffna District Branch

## பொங்கல் விழா - 2024








## 76வது சுதந்திர தின விழா

யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற இலங்கையின் 76வது சுதந்திர தின விழாவில் எமது மாவட்ட சாரணர்களின் அணிவகுப்பு மரியாதை.




## 10வது தேசிய சாரணர் ஐம்போறி - திருகோணமலை






JAFFNA

## சேவைமூப்பு பிரியவிடை

யாழ் மாவட்ட அரச அதிபரும் யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் பதவிவழி தலைவருமான திரு. அ.சிவபாதசுந்தரன் அவர்களின் சேவைமூப்பு பிரியவிடையானது 07.03.2024 அன்று மதியம் 2 மணியளவில் அரச அதிபர் செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ் மாவட்ட சாரணர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் கிளைசங்க உறுப்பினர்கள் உதவி மாவட்ட ஆணையாளர்கள் சாரணர்கள் அனைவரும் அவரை கௌரவித்து பிரயாவிடையளித்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிளைசங்க உறுப்பினர்கள் உதவி மாவட்ட ஆணையாளர்கள் சாரணர்கள் அனைவருக்கும் மாவட்டம் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.





## கலைக்கூறு II பயிற்சியினுடைய சான்றிதழ் வழங்கல்

08.10.2023 அன்று நடைபெற்று முடிந்த கலைக்கூறு II பயிற்சியினுடைய சான்றிதழ்கள் இன்று 02.04.2024 மாலை 4 மணிக்கு யாழ் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் உதவி மாவட்ட ஆணையாளர் பயிற்சி திரு.ஆ. ரஜீவன் அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பயிற்சி தலைவர் மற்றும் தலைமைக் காரியாலய ஆணையாளர் திரு. ப.அஜித்குமார் அவர்கள் கலந்து கொண்டார்.





## ஜனாதிபதி விருது

சாரணர் பிரிவின் உயரிய விருதான ஜனாதிபதி சாரணர் விருதினை புனித கிறிஸ்தோபர் கடற் சாரணர் குழுவினைச் சேர்ந்த ஜோ.எஸ் ரீபன்ராஜ் வென்றுள்ளார், அவருக்கான ஜனாதிபதி விருது சின்னத்தினை மாவட்ட சாரண ஆணையாளரும் பதில் அரச அதிபருமான மருதலிங்கம் பிரதீபன் அவர்களினால் 31.05.2024 அன்று யாழ் மாவட்ட செயலகத்தில் வைத்து சூட்டப்பட்டது.





## சர்வதேச சின்னங்கள் தொடர்பான கலந்துரையாடல்

Scout of the world Award மற்றும் Champion for nature challenge ஆகியவற்றின் அறிமுகம் மற்றும் அதனை எவ்வாறு வெற்றி கொள்வது தொடர்பான சின்னங்களின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களான திருமதி.ச.மீனாம்பிகா ( உதவி மாவட்ட ஆணையாளர் சர்வதேசம்) மற்றும் திரு.சி.சிறிகரன் (உதவி மாவட்ட ஆணையாளர் ஊடகம்) அவர்களின் தலைமையில் 17.06.2024 அன்று யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் இடம்பெற்றது.




## 10வது தேசிய சாரணர் ஜம்போரி - சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

10வது தேசிய சாரணர் ஜம்போரியில் கலந்து கொண்ட சாரணர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது 22.07.2024 அன்று மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஆணையாளர் உயர்திரு. ம.பிரதீபன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சாரண ஆசிரியர்கள், சாரணர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்,




## நெடுந்தீவு பாடசாலை மாணவர்களுக்கான சாரணர் பயிற்சிகள்

நெடுந்தீவு பாடசாலை மாணவர்களுக்கான சாரணர் பயிற்சியினை யாழ் மாவட்ட அரச அதிபரும், மாவட்ட சாரண ஆணையாளரும் ஆகிய திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் இன்று 26.07.2024 உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் "சாரணியதினூடாக மாணவர்கள் எதிர்கால வாழ்க்கையினை இலகுவாக முகம் கொடுக்கும் வகையில் வளருவதுடன், ஆளுமைமிக்க ஒத்திசைவான மாணவர் சமுதாயம் ஒன்று உருவாக்க நாம் எமது பங்களிப்பை வழங்குவது எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்தார். இந்நிகழ்வில், நெடுந்தீவு பிரதேச செயலகர், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் என பலர்கலந்து கொண்டனர்.








## நெடுந்தீவு சாரணர்களுக்கான பயிற்சிப் பாசறையின் தீப்பாசறை நிகழ்வு






## நெடுந்தீவு சாரணர்களுக்கான பயிற்சிப் பாசறையின் சின்னம் சூட்டும் நிகழ்வும் நிறைவு நிகழ்வும் 27.07.2024













## மூத்த சாரணர்களுகான ஜம்போரி

உலகின் முதலாவது மூத்த சாரணர்களுகான ஜம்போரீயில் யாழ் மாவட்டத்தினை சேர்ந்த மூத்த சாரணர் Dr. இ.தில்லைவாசன் அவர்கள் பங்குபற்றினார், அவருக்கு எமது மாவட்ட ஆணையாளர் உயர்திரு. ம.பிரதீபன் அவர்கள் மாவட்ட கொடியினை வழங்கி வழியனுப்பி வைத்தார்.








## வருடாந்த நல்லூர் மகோற்சவ பெருந்திருவிழா











நல்லூர் வருடாந்த மகோற்சவ சாரணர் சேவையில் ஈடுபட்ட சாரணர்களை கௌரவிக்கும் நிகழ்வானது மாவட்ட சாரண ஆணையாளர் திரு மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 03.09.2024 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. க. கிருஷ்னேந்திரன், முன்னாள் உதவி மாவட்ட ஆணையாளரும் சாரணர் நலன்விரும்பியுமான திரு.R.ராஜ்குமார் அவர்களும், ஜனாதிபதி சாரணர் திரு யோகநாதன் புத்ரா அவர்களும் கிளைச்சங்க செயலாளர் திரு.செ.தேவரஞ்சன் அவர்களும், பொருளாளர் திரு.ச.ஹர்சன் அவர்களும், உதவி மாவட்ட ஆணையாளர்கள், முன்னாள் உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணர்கள், திரி சாரணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.








## CONGRATULATIONS FOR WINNING THE WOOD BADGE



N.MAKESWARRAN
JAFFNA CENTRAL COLLEGE



MR.J.MARIATHILAKSHAN
ST. JOHN'S COLLEGE. JAFFNA

## 2வது தேசிய கிடோறி




## யாழ் மாவட்ட ஊடகப்பிரிவு

யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஊடக துறையின் அங்கத்தவர்களுக்கு 08.12.2024 அன்று மாவட்ட ஆணையாளர் உயர்திரு மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. மேலும் அவர்களுக்கான உத்தியோக பூர்வ இணைப்புக் கடிதத்தினையும் அவர்களுக்கான ஊடக அடையாள அட்டையினையும் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு, ஊடக துறையின் எதிர்கால செயல்திட்டங்கள் தொடர்பிலும் கேட்டு அறிந்ததுடன் பல ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார். குறித்த நிகழ்வில் உதவி மாவட்ட ஆணையாளர நிர்வாகம், திரு.பே.கஸ்ரோ அவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்குறித்த நிகழ்வினை உதவி மாவட்ட ஆணையாளர் (ஊடகம்) அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்.




## ஒளி விழா

யாழ் மாவட்ட சாரணர் கிளையின் அனுசரனையுடன் யாழ் மாவட்ட திரிசாரணர் குழாமின் ஒழுங்கமைப்பில் SOS கிராம சிறார்களுடன் இனிதே நடைபெற்றது. அன்பு, கருணை, நம்பிக்கையினை பிரதிபலிக்கும் இவ் விழாவில் அருட்தந்தை டிவசன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆசிவழங்கினார். மேலும் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக SOS இயக்குநர் செ.பத்மராசா அவர்களும், யாழ் மாவட்ட கிளைச்சங்க செயலளார் திரு.செ.தேவறஞ்சன் அவர்களும், கௌரவ விருந்தினாராக உதவி மாவட்ட ஆணையாளர் (நிர்வாகம்) திரு.பே.கஸ்ரோ அவர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் இந் நிகழ்வில் உதவி மாவட்ட ஆணையாளர் (ஊடகம் மற்றும் தொழில்நுட்ப்பம் ) திரு.சி.சிறிதரன், திரிசாரணர்கள், சாரணர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டிருந்தனர்.









## யாழ் மாவட்ட குருளையர்களின் செயற்பாடுகள்

யாழ் செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலையில் 29.03.2024 அன்று இடம் பெற்ற நட்புறவு முகாம்.





யாழ் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் குருளைச் சாரணர் நட்புறவு முகாமும் நடை பவனியும் 01.06. 2024 அன்று பிற்பகல் 2:30 மணிக்கு அதிபர் திரு.வி. சுதாகரன் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.






யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய குருளைச் சாரணர்களின் நட்புறவு பாசறையும் விழிப்புணர்வு நடைபயணமும் 21.06.2024 அன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் அருட் சகோதரி மரி ஏஞ்சலிகா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்திரு.ம.பிரதீபன் பதில் அரச அதிபரும் மாவட்ட சாரண ஆணையாளர் அவர்களும் சிறப்பு விருந்தினராக திருமதி.பி. அருள்சந்திரன் உதவி மாவட்ட ஆணையாளர்(குருளை) அவர்களும் கௌரவ விருந்தினராக அருட் தந்தை FR.A.யாவிஷ் அவர்களும் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் வளவாளர்களாக உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்களும் மேற்கொண்டிருந்தனர்.






யாழ் புனித பெனடிக் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை குருளை சாரணர்களின் நட்புறவு முகாமும் விழிப்புணர்வு நடை பவனியும் 30.06.2024 அன்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியா வசந்தி A.C அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாவட்ட சாரண ஆணையாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும் (பதில் அரச அதிபர்), சிறப்பு விருந்தினராக உதவி மாவட்ட ஆணையாளர் (குருளை) திருமதி பிறைசினி அருட்சந்திரன் அவர்களும் கௌரவ விருந்தினராக அருட்தந்தை M.M.H.ஞானேந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.





யாழ் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை குருளை சாரணர்களின் நட்புறவு முகாமும் விழிப்புணர்வு நடை பவனியும் பாடசாலை அதிபர் கவின்ஞா நவஜீவா அவர்களின் தலைமையில் 21.07.2024 அன்று இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாவட்ட சாரண ஆணையாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும் (பதில் அரச அதிபர்), சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட கிளைச்சங்க தவிசாளர் கலாநிதி.திரு.க.எழில்வேந்தன் அவர்களும் கௌரவ விருந்தினராக வைத்தியர். த.துசியந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.





யாழ் இந்து ஆரம்ப பாடசாலை குருளைச் சாரணர் நட்புறவு முகாமும் நடைபவனியும் 28.07.2024 அன்று நடைபெற்றது. கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாவட்ட சாரண ஆணையாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும், சிறப்பு விருந்தினராக உதவி மாவட்ட ஆணையாளர்(குருளை) திருமதி. பிறைசினி அருள்சந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



யாழ் இந்து பெண்கள் ஆரம்ப பாடசாலை குருளை சாரணர்களின் நட்புறவு முகாமும் விழிப்புணர்வு நடை பவனியும் 08.09.2024 அன்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி சி.வாகீசன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாவட்ட சாரண ஆணையாளர் உயர்திரு ம.பிரதீபன் அவர்களும் (பதில் அரச அதிபர்), சிறப்பு விருந்தினராகஉதவி மாவட்ட ஆணையாளர்(குருளை) திருமதி. பிறைசினி அருள்சந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் கல்லூரியின் குருளை சாரணர்களின் நட்புறவு முகாமும் விழிப்புணர்வு நடை பவனியும் 06.10.2024 அன்று நடைபெற்றது. கல்லூரி அதிபர் அருட்சகோதரி மெரினா சகாயம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிராம சேவகர் திருமதி ச.ராஜீவ்பிரகாஷ் அவர்களும், சிறப்பு விருந்தினராக உதவி மாவட்ட ஆணையாளர்(குருளை) திருமதி. பிறைசினி அருள்சந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.




## புதிய குருளையர்களின் சின்னம் சூட்டல் நிகழ்வுகள்





## தங்கத்தாரகை நேர்காணல்



## யாழ் மாவட்ட சாரணிய பாடசாலைகளின் செயற்பாடுகள்

31.03.2024 உயிர்த்த ஞாயிறு அன்று புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற திருச்சுருவ பவனியின் போது சாரணர் சேவையில் ஈடுபட்ட புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர் குழு.



2024.04.07-08 அன்று மருதமடு மாதாவின் யாழ் வருகையின் போது புனித யாகப்பர் ஆலயம், குருநகர் பகுதியில் பகல் மற்றும் இரவில் முழு நேர சாரணர் சேவையில் ஈடுபட்ட புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர் குழு.



யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் சாரணர் குழுவின் 108வது வருடத்தினை முன்னிட்டு பாசறை ஒழுங்கு செய்யப்பட்டு கல்லூரி வளாகத்தில் 03.05.2024 - 05. 05.2024 வரை இடம்பெற்றது. இறுதி நாள் 05.05.2024 அன்று கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பதில் மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ்ப்பாண மாவட்ட சாரணர் ஆணையாளரும் ஆகிய உயர்திரு.ம.பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அவர்களுடன் உதவி மாவட்ட ஆணையாளர்கள் திரு.ஆ.ரஜீவன், திரு.கஸ்ரோ ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் 80 ஆவது ஆண்டு நிறைவு முன்னிட்டு 07.07.2024 அன்று கல்லூயில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந் நிகழ்வின் காப்பாளராக கல்லூரி அதிபர் திரு. பொ. வசந்தன் அவர்கள் செயற்பட்டார். இந் நிகழ்வினை குழுசாரண தலைவர் திரு. மு. அசோக்குமார் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். பிரதம விருந்தினராக உதவி பிரதம செயலாளர் திருமதி.அனெற் நிந்துஷா அன்ரனி டினேஸ் அவர்களும், சிறப்பு விருந்ததினராக யாழ்மாவட்ட சாரண ஆணையாளரும் பதில் மாவட்ட அரசாங்க அதிபருமாகிய திரு. ம. பிரதீபன் அவர்கள் கலந்து கொண்டார். விருந்தினர்களாக உதவி மாவட்ட ஆணையாளர் (நிர்வாகம்) திரு. பே. கஸ்ரோ அவர்களும், உதவி மாவட்ட ஆணையாளர் ஆகிய திரு. ம. ஞானசம்பந்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.





15,16-07-2024 அன்று குருநகர் புனித கார்மேல் மாதா ஆலய திருவிழாவின் போது சமய சேவையில் ஈடுபட்ட புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர் குழு.





## யாழ் மாவட்ட திரிசாரணர்களின் செயற்பாடுகள்

யாழ் மாவட்ட திரி சாரணர் குழாமின் ஏற்பாட்டில் தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டம் 15.04.2024 அன்று சிறப்பாக இடம்பெற்றது. பொங்கல் நிகழ்வு மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன





யாழ்ப்பாணம் வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ சப்பர,தேர், தீர்த்த திருவிழாவில் யாழ் மாவட்ட திரிசாரணர்களின் சமய சேவை.



யாழ் மாவட்ட திரிசாரணர் குழாமினால் 8வது தடவையாக 27.08.2024 அன்று இரத்ததான முகாம் ஒழுங்குபடுத்தப்பட்டது.



யாழ் மாவட்ட திரிசாரணர் குழாமின் ஒழுங்கமைப்பில் நவராத்திரி விழா 2024



யாழ் மாவட்ட திரிசாரணர் குழாமின் ஒழுங்கமைப்பில் 25.11.2024 அன்று சாரணர்களிற்கான தலைமைத்துவப் பயிற்ச்சி பட்டறை ஒழுங்கமைக்கப்பட்டது. இப் பயிற்சி நெறியில் யாழ் சாரணர் மாவட்ட பாடசாலைகளை சேர்ந்த 108 சாணர்கள் பங்குபற்றினர். பங்குபற்றிய சாரணர்களிற்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.




வெள்ள அனர்த்த நிலைமையின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவையில் ஈடுபட்ட மாவட்ட திரிசரணர் குழாம்.



## 35th National Rover Moot








**எமது மாவட்டத்தில் இருந்து உதவி மாவட்ட ஆணையாளர் திரு. ம. சம்பந்தன் அவர்கள் மற்றும் பின்வரும் திரிசாரணர்கள் கலந்து கொண்டனர்.** Anton George Charles, kantharuban Tharsan, Jeyathilakan Mariathilakshan, Kanthanesan Banujan, Premkumar Stuved JeffreyLukkesh, Nagulenthiran Dineshkanth, Venthika Sivaranjan, Aswieni Udhayakumar, Thavarasa Dilakshan, Selvakumar Brunthan, Santhiramohan Kanistan, Shanthakumar Dinushanthan







எமது மாவட்ட கிளையின் முன்னாள் உதவி மாவட்ட ஆணையாளர்(கடற்சாராணர்) திரு.R.மைகல் அவர்கள் 27.07.2024 - 03.08.2024 ஆம் திகதி வரை லண்டன் இல் இடம்பெற்ற எஸ்செக் சர்வதேச சாரணர் ஜம்போரியில்...







**No one can pass through life, any more than he can pass through a bit of country, without leaving tracks behind, and those tracks may often be helpful to those coming after him in finding their way.**

**- Robert Baden-Powell -**

## SILVER LOTUS



**Mr.S.Thevaranjan CLT**
Former District Commissioner
Member of National Training Team
Sri Lanka Scout Assiciation

## MEDAL OF MERIT



**Mrs. E I THEVAMITHRAN CLT**
Former Asst. District Commissioner
Member of National Training Team
Sri Lanka Scout Assiciation



**Mr. K.Thutjeyanthan (CLT)**
Former Asst. District Commissioner
Member of National Training Team
Sri Lanka Scout Association

## SERVICE MEDAL



**Mr. A.Rajeevan (SLPS-II,ALT)**
Asst. District Commissioner (Training)
Member of National Training Team
Sri Lanka Scout Association



**Mr.N.Lingeshwaran**
Asst. District Commissioner (Nallur)



**Mr.S.S.Thomas**
Asst. District Commissioner (Island)

## CERTIFICATE OF MERIT



**Mrs. P.Arulchanderan**
Asst. District Commissioner (Cubs)



**Mr. G.Sathyan**
Asst. District Commissioner (Programme)

## LETTER OF COMMENDATION



**Mr.A.Denoyan**
Scout Leader
St Christopher Seas Scout.



**Mr.S.Juginthan**
Scout Leader
St Christopher Seas Scout .



**Mrs.R.Kupenthirathas**
Scout Leader
St Jhons Bosco Vid.

இலங்கை சாரணர் சங்கத்தின் விருது விழா 2024 விருதுகளை பெற்று எமது மாவட்ட சாரணர் கிளைக்கு பெருமை சேர்த்த சேவையாளர்களை வாழ்த்துகின்றோம்.

FOLLOW OUR SOCIAL PROFILES